## உள்ளே புகுமுன்

ஒரு நிகழ்ச்சிக்கு, விழாவிற்கு செல்லும் இடத்தில் எல்லோரும் நம்மை இன்முகத்துடன் வரவேற்க வேண்டும், அன்புடன் நம்மிடம் பேச வேண்டும் என அனைவரும் எதிர்பார்க்கின்றோம். அலுவலகத்திலும், பொது வாழ்விலும் நமக்குத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை கூடக்கூட நமது தன்னம்பிக்கையும் கூடுகிறது. பொதுவாக நாம் மனிதர்களுக்குள் இருக்கும் போதும், வாழும் போதும் தான் சமூக வாழ்க்கையை பெற முடிகிறது. மனித இன வரலாற்றில் மனிதர்கள் எங்கும், எப்போதும் தனிமனிதர்களாய் இருந்ததில்லை. குடும்பம், சமூகம், அலுவலகம், தொழிற்கூடம் என கூட்டாகவே இருக்கின்றனர், வாழ்கின்றனர். இப்போது இந்தக் கூட்டுவாழ்க்கைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. தகவல் தொடர்பும், உற்பத்தி முறையின் வளர்ச்சியும், மனிதர்களைத் தனித்தனியாக மாற்றிவிட்டது. இன்று மனிதர்கள் தங்களின் கருத்துக்களை சகமனிதர்களுடன் பகிர்ந்து கொள்வதில்லை. கூட்டாக சேர்ந்து இருப்பது இயல்பான குணமாக இருப்பினும், பல்வேறு வாழ்நிலை மற்றும் சூழ்நிலை மனிதர்களை பிரித்தே வைத்துள்ளது. இதற்கான காரணங்களை அறிந்து, அவற்றை உணர்வு பூர்வமாக மாற்றிட இங்கு சில வழிமுறைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

உதாரணமாக,

அவர் மிக நல்ல மனிதர் . . .
அவருடன் பேசிக்கொண்டே இருக்கலாம் !
அவரின் கண்களும் பேசுகின்றன . . .
அவருடன் வேலைசெய்வது மகிழ்ச்சியைக் கொடுக்கிறது !
அவரை விட்டுப் பிரிய மனம் இடம்தரவில்லை . . .

என்ற நேர்மறையான எண்ணங்களும்,

அவன் ஒரு மனிதனே இல்லை
அவரை பார்க்கவே பிடிக்கவில்லை
அவரை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்கமுடியாது
அவருக்கு யாருடன் எதைப்பேசுவது என்றே தெரியவில்லை

என்ற எதிர்மறையான கருத்துக்களும் சமூதாயத்தில் நிழவுகின்றன. இத்தகைய கருத்துக்கள் உருவாக அவர்களின் மனிதர்களுடனான அணுகுமுறையே முக்கிய காரணமாகும்.

அவசரமான இந்த வாழ்க்கையில் மனிதர்களும் இயந்திரங்களாகி விட்டனர். தேவையை ஒட்டி மட்டுமே உறவு வைத்துக்கொள்வதும், அவசியமின்றி பேசுவதற்குக்கூட தயங்குவதும் இன்று இயல்பாகிவிட்டது. இத்துடன் இன்றைய வாழ்க்கையின் அழுத்தம், மனிதனின் பலவீனம், பிரச்சினைகளை எதிர்கொள்ளத் திறமையின்மை, போன்றனவும் ஒருவருடன் ஒருவர் பழகுவதை பலவீனப்படுத்துகின்றன.

ஒருவருடன் ஒருவர் பழகுவதற்கும், பேசுவதற்கும் இன்று பல்கலைக் கழகங்களில் பாடங்கள் நடத்தப்படுகின்றன. மனித வள மேம்பாடு என்று எல்லா நிறுவனங்களிலும் இதற்கான தனிப் பிரிவுகள் ஏற்படுத்தப்படுகின்றன. ஆனால் மனித உறவு பாடங்களின் மூலமோ, தனிப்பயிற்சியின் மூலமோ வருவதில்லை. அன்றாட வாழ்வில் இயல்பாய் இருக்க வேண்டியவையாகும்.

குழந்தைகளை மற்றவர்களுடன் பழகவிடாமல், படிப்பதும், மதிப்பெண்கள் வாங்குவது மட்டுமே வாழ்க்கை என வளர்க்கத் தொடங்கி, அதற்குப்பின் வேலைக்கான தயாரிப்புகள் செய்வது என்றும், பின்னர் பணிகளைச் செய்வது என்றும் வாழ்க்கை ஆகிவிட்டது. இது இன்று மனநிலை பாதித்தவர்களையும், இயந்திர மனிதர்களையும் உருவாக்கியுள்ளது.

குடும்பத்திலும், அலுவலகத்திலும், சமூகத்திலும் இன்று மனிதர்கள் மட்டும் இருக்கிறார்கள், மனித உறவுகள் மறைந்துபோய்விட்டன. அவற்றை மீண்டும் புதுப்பிக்கும் முயற்சியில் இது ஒரு சிறு முயற்சி. இங்கு மனிதர்களுக்கிடையில் ஏற்படும் சின்னச்சின்ன முரண்பாடுகளை, முகச்சுளிச்சல்களை போக்குவதற்கு சில ஆலோசனைகளை முன்வைத்துள்ளேன். இவை மனித மனங்களை வெல்லும் கலைகள். நீங்களும் பின்பற்றி பல இதயங்களை வெல்லுங்கள், உறவுகளில் மூழ்கி மகிழ்ச்சி முத்தெடுங்கள்.



## மனிதர்களை சரியாக அறியும் கலை

மனிதர்களையும் அவர்களது குணங்களையும் முழுமையாகவும், முறையாகவும் புரிந்துகொள்வது தான் அவர்களுடன் நல்லுறவையும் நெருக்கத்தையும் வளர்த்துக்கொள்ள உதவும்.

மனிதர்களையும் அவர்களது இயல்புகளையும் புரிந்து கொள்வது

- அவர்கள் ஒன்றைச் செய்வதற்கான காரணத்தை அறிந்து கொள்வதும்
- குறிப்பிட்ட சூழ்நிலையில் அவர்கள் எப்படி, எவ்வாறு எதிர் வினையாற்றுவார்கள் என்பதை அறிந்து கொள்வதும் ஆகும்.

இவைதான் மனிதமனங்களை வெல்வதற்கு அவசியமான அடிப்படைகள்.

மக்கள் மற்றும் மனித இயல்புகளை அறிவது என்பது அவர்கள் எவ்வாறு உள்ளார்கள் என்பதை அறிவதாகும். மாறாக அவர்கள் இவ்வாறு இருக்க வேண்டும் என்று நாம் அனுமானிப்பதல்ல. யதார்த்தத்தில் அவர்கள் எவ்வாறு உள்ளார்கள் என்பதை அறியவேண்டும்.

மனிதர்கள் முதலாவதாக அவர்களின்பால் அதிக அக்கறையுடையவர்களாகவும், அவர்களின் வாழ்விலும், வளர்ச்சியிலும் முழுமையான விருப்பமுடையவர்களாகவும் இருக்கிறார்கள். மற்றவர்களைப் பற்றியோ, உங்களைப்பற்றியோ, அதிகம் அக்கறை கொள்வதில்லை.

இதையே வேறுவகையில் சொன்னால் ஒவ்வொரு மனிதனும் மற்றவர்களை விரும்புவதைவிடப் பத்தாயிரம் தடவை அவன்பால் அதிக விருப்பம் கொண்டுள்ளான்.

இது உங்களுக்கும் பொருந்தும். நீங்கள் உங்கள் வாழ்வின்மேல் காட்டும் விருப்பம் மற்றவர்களிடம் காட்டும் விருப்பத்தைவிடப் பலமடங்கு அதிகம் என்பது உண்மைதானே?

மனிதனின் செயல்பாடுகள் அனைத்தும் அவனது சுயமுன்னேற்றம், சுய விருப்பம் மற்றும் சுயஉயர்வைச் சார்ந்தது என்பதை மறந்துவிடக் கூடாது.

'தான்' என்பது மனிதனுடன் இரண்டறக் கலந்துவிட்ட ஒன்று. மற்றவர்களுக்கு உதவுவதும், கொடுப்பதும் கூட உதவி, ஈகை என்பதைவிட அவன் கொடுப்பதால் கிடைக்கும் சுய திருப்திதான் அவனுக்குப் பெரிது. அதன் மூலம் மற்றவர்கள் பெரும் பயன் இரண்டாவதாகவே கருதப்படுகிறது.

மனிதனின் 'தனது' என்ற சுய விருப்பம் மற்றும் சுய திருப்தி, அவனின் தொடக்க காலம் தொட்டு, அதாவது ஆதிமனிதன் முதல் இருக்கும் இயல்பான குணமாகும். அது அவனது இறுதிக்காலம் வரை இருக்கும், மாறவே மாறாது. அதற்காக வருத்தப்படவோ, அதிர்ச்சியடையவோ தேவையில்லை. ஒவ்வொருவரும் தனக்கான சிந்தனையை முன்வைத்தே செயல்படுகின்றனர். அதுவே மனித இனத்தின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக இருந்து வருகின்றது. சமுதாய உணர்வு கூட, அவனது தற்காப்பு மற்றும் அவனது இருத்தலுக்கான அவசியத்தில்தான் உருவாகின்றது. தனது வாழ்வின் உத்திரவாதத்திற்குத்தான் மனிதன் கூட்டாக வாழ நினைக்கின்றான், இல்லாவிட்டால் தனித்தனியாகவே வாழ்ந்திருப்பான்.

மனிதர்கள் தனக்கான, தனது உயர்வுக்கான விருப்பத்தை எந்த அளவுக்கு கொண்டுள்ளனர் என்ற உண்மையை அறிவது, அவர்களுடன் நெருக்கத்தை ஏற்படுத்த மிகவும் அவசியம், என்பதை புரிந்துகொள்ள வேண்டும். இந்த உண்மையை நினைவு கொள்ளுதல், மற்றவர்களுடன் உறவை ஏற்படுத்தும் திறனையும், ஆற்றலையும் கொடுக்கின்றது. இனி வரும் அனைத்து வழிமுறைகளும் இதனை அடிப்படையாகக் கொண்டதே.

மனிதர்களின் சமூக வாழ்வுக்கு ஒருவரை ஒருவர் சார்ந்திருக்க வேண்டியுள்ளதால் அவர்கள் ஒன்றாக வாழ்கின்றனர். இதை நாம் குடும்பங்களில் காண முடியும், தனக்கு கூடுதல் லாபம் இருக்கும்வரை கூட்டுக் குடும்பத்திலும், அவ்வாறு இல்லாத போது தனிக்குடும்பமாகவும் உடைந்து போவதும் "தான்" என்ற உணர்வால்தான். இதே அணுகுமுறைதான் வியாபாரத்திலும் பிரதிபலிக்கின்றது. ஆரம்பிக்கும்



போது கூட்டாகத் தொடங்கி, அதிக லாபம் வர ஆரம்பித்ததும், ஒருவருக்கு ஒருவர் சண்டையிட்டு, பிரிந்து செல்வது கண்கூடான காட்சியாக உள்ளன. கூட்டாக வாழ்வதற்கும், தனியே பிரிந்து செல்வதற்கும் அடிப்படையாக அமைவது சுயநலமே ஆகும்.

சுருக்கமாக, ஒவ்வொரு மனிதனும் முதன்மையாக தனது உயர்வில்தான் அதிகம் விருப்பம் கொண்டுள்ளான். மற்றவர்களின் உயர்வு பற்றி இரண்டாவதாகவே எண்ணுகின்றான். மற்றவர்களோடு பேசும்போதும், பழகும்போதும் இந்த உண்மையை நினைவில் கொள்ள வேண்டும் அதற்கேற்ப நம் பேச்சு மற்றும் அணுகுமுறை இருக்க வேண்டும்.



## மனிதர்களிடம் திறமையாகப் பேசும் கலை

மனிதர்களிடம் பேசும்போது, உலகத்தில் அவர்களுக்கு அதிக விருப்பமுள்ள பொருளைத் தேர்வு செய்து பேச வேண்டும். உலகத்தில் அவர்களுக்கு அதிக விருப்பமுள்ள முதன்மையான பொருள் எதுவாக இருக்க முடியும் ?

அது அவர்கள், அவர்கள் மட்டும்தான்.

நீங்கள் யாருடன் பேசுகின்றீர்களோ, அவர்களைப் பற்றிப் பேசுவதுதான் அவர்களுக்கு முக்கியமானது, முதன்மையானது. அவர்கள் உங்களை உயர்வாகக் கருத அவர்களைப் பற்றியே உங்கள் பேச்சு சுற்றி வர வேண்டும்.

அவர்களைப் பற்றிப் பேசும்போது மட்டுமே அவர்களின் மனதை எவ்வித தடங்களும் இன்றிக் கவர முடியும். மனிதர்களின் இயல்பான குணமும் இதுதான். இதைத்தவிர்த்து உங்களைப் பற்றியோ, மற்றவர்கள் பற்றியோ, அவர்களிடம் பேசும்போது அவர்களின் மனதைத் தொடுவது சாத்தியமில்லை. இது மனித இயல்புக்கு எதிரான அணுகுமுறையாகும்.

மற்றவர்களிடம் பேசும்போது, உங்களது பேச்சு அகராதியில் இருந்து, நான், என், எனது, என்னுடைய என்ற வார்த்தைகளை முற்றாக எடுத்து விடுவது சரியான அணுகுமுறையாகும். சுருக்கமாகச் சொன்னால், உங்களைப் பற்றிப் பேசுவதை, சுய தம்பட்டம் அடிப்பதை முற்றாகத் தவிர்க்க வேண்டும்.

இதற்குப் பதில் முக்கியமான, அதிக ஆற்றலைக் கொடுக்கக் கூடியவை

நீ, நீங்கள் என்கின்ற வார்த்தைகள்தான். அதாவது அவர்களைப் பற்றியே பேசுவதுதான்.

நீங்கள் பேசும்போது,

இது உங்களுக்காக... இதன் மூலம் நீங்கள் பயனடையலாம்.. இது



உங்கள் குடும்பத்தினரைக் கவரும்... இதன்மூலம் நீங்கள் இரண்டு வகையில் இலாபமடையலாம்... என்று அவர்களுக்கு கிடைக்கும் உயர்வான நிலையைப்பற்றியும், இலாபத்தைப் பற்றியும், பேசவேண்டும்.

நீங்கள் உங்களைப் பற்றிப் பேசுவதில் இருக்கும் மகிழ்ச்சியை விடுத்து, உங்களுடன் பேசுகின்றவரைப் பற்றி பேசுவதில் மகிழ்ச்சியடையும் குணத்தை பெற்றால், அதுவே உங்களது, உரையாடல் திறனையும், ஆற்றலையும் அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை, ஆனால் அவ்வளவு எளிதில் இதைச் செய்துவிட முடியாது. தொடர்ந்த உணர்வுப்பூர்வமான பயிற்சியின் மூலமே இதைப்பெற இயலும். அவ்வாறு பெறுவது ஒரு சிறந்த குணமாக அமையும். அதற்கு உங்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கும் சிந்தனை முறையில் மாற்றம் கொண்டுவர வேண்டும்.

மனிதர்களிடம் தொடர்ந்து பேச வேண்டுமானால் பேசுவதற்கான, விபரங்கள் வேண்டும், அதுவும் அவர்களைப்பற்றிய, அவர்களுக்கு சாதகமான விபரங்கள் வேண்டும். அதையும் அவர்களிடம் இருந்துதான் பெற்றாக வேண்டும். எனவே அவர்களைப் பற்றியே பேசுங்கள். அவர்களைப்பற்றி பேசுவதைவிட மகிழ்ச்சியான உரையாடல் வேறு எதுவும் இருக்க முடியாது. அவர்களின் நலன், மட்டுமல்ல, அவர்கள் சார்ந்தவர்களின் நலன் குறித்து விசாரிப்பதும், பேசுவதும் அவர்களை ஈர்க்கும் செயலாகும்.

உதாரணமாக சில உரையாடல்களைப் பார்ப்போம்.

"உங்கள் குடும்பத்தினர் எவ்வாறு உள்ளார்கள் ராஜன்?"

"உனது மகன் எப்படிப் படித்துவருகின்றான்?"

"உனது திருமணமான பெண் எவ்வாறு இருக்கிறார்?"

"அந்த நிறுவனத்தில் எவ்வளவு காலமாக நீ பணியாற்றி வருகின்றாய்?"

"இந்தப்படம் உங்கள் குடும்பத்தினருடையதா?"

"இந்த பயணத்தை நன்றாக அனுபவித்தாயா குமார்?"

ஒருவர் மற்றவர்களைத் திறம்படக் கவர முடியாமல் போவதற்கான முக்கியக் காரணம், அவர் தன்னைப் பற்றியே அதிகம் சிந்தித்துக்

கொண்டிருப்பதும், பேசிக்கொண்டிருப்பதும்தான். எனவே உரையாடலின்போது நாம் நமது பேச்சையும், அவற்றின் பொருளையும் விரும்புவதைவிட, அதைக் கேட்பவர்கள் எந்த அளவுக்கு அதை விரும்புகிறார்கள் என்பதுதான் முக்கியம். இதை நன்றாக மனதில் பதியவைத்துக்கொண்டு, அதன் அடிப்படையில் மற்றவர்களுடன் பேசும்போது, தானாகவே உங்கள் பேசும் திறன் வளரத் தொடங்கும், உறவு வளரும்.

எனவே மற்றவர்களிடம் பேசும்போது, அவர்களைப் பற்றியும், அவர்கள் விரும்பும் செய்திகள், பொருட்கள் பற்றியும் பேச வேண்டும். அவ்வாறு பேசக் கற்றுக்கொண்டால், நீங்கள் சிறந்த உரையாடல் செய்யும் திறனை பெற்றவராக மாறிவிடலாம்.

**ஒவ்வொரு மனிதனையும் முக்கியமானவராக எண்ணச் செய்யுங்கள்**

மனிதர்கள் செய்யும் ஒவ்வொரு செயலும் – அது நல்லதோ கெட்டதோ – தன்னை வெளிப்படுத்தி முக்கியத்துவம் பெறுவதையே நோக்கமாக கொண்டிருக்கும். தன்னை மற்றவர்கள் உயர்வாகக் கருதவேண்டும், அதாவது தன்னை மற்றவர்கள் அங்கீகரிக்க வேண்டும் என்பதுதான் மனிதர்களின் மனதில் நிலவும் முக்கியமான, இயல்பான விருப்பமாகும்.

எனவே, நீங்கள் மனிதர்களிடம் நல்லுறவை, நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமானால், அவர்களை முக்கியமானவர்கள் என எண்ணச் செய்யுங்கள். நீங்கள் எந்த அளவுக்கு அவர்களை உயர்வாக, முக்கியமானவராக எண்ணும்படி செய்கின்றீர்களோ, அந்த அளவுக்கு அவர்கள் உங்களிடம் நெருக்கம் கொள்வார்கள், உங்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்வார்கள்.

ஒவ்வொருவரும் அவர்களை மற்றவர்கள் மதிக்கவேண்டும், உயர்வாகக் கருத வேண்டும் என எண்ணுகின்றனர். அதேபோல, யாரும் தங்களை மற்றவர்கள் தாழ்வாக எண்ணுவதை விரும்பமாட்டார்கள்.

நீங்கள் உங்களுக்கு எவ்வளவு முக்கியமோ, அதேபோல்தான் ஒவ்வொருவருக்கும் அவரவர்கள்தான் முக்கியம். இதை அறிந்து கொண்டு மற்றவர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது, மனித உறவை வளப்படுத்தும், நிலைப்படுத்தும்.



மற்றவர்களோடு பழகும்போதும், பேசும்போதும், அவர்களை முக்கியமானவர்கள் என்று நாம் கருதுகிறோம் என்பதை அவர்கள் அறிய வேண்டும். அதை எப்படிச் செய்வது? இதோ அதற்கான சில வழிமுறைகள்:

1. அவர்கள் சொல்வதைச் செவிகொடுத்துக் கேட்கவேண்டும்.

   ஒருவர் கூறுவதைக் கேட்கமறுப்பதும், கவனிக்காமல் இருப்பதும், அவர்களை அவமதிப்பதாகும். மேலும் இது அவர்களை முக்கியமானவராகக் கருதாமல் இருப்பதைக் காட்டுவதாகும். அவர்களின் பேச்சைக் கவனிப்பது அவர்களை உயர்வாக கருதச்செய்யும் சிறந்த வழியாகும்.

2. அவர்களின் செயலைப் பாராட்டவும், வரவேற்கவும் மறக்காதீர்கள்.

   மற்றவர்கள் செய்யும் சிறப்பான செயலைப் பாராட்டுவதும், வரவேற்பதும் அதற்குப் பரிசுகள் கொடுப்பதும், அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் செயல்களாகும்.

3. மற்றவர்கள் பெயர்களைச் சொல்லி அழையுங்கள், அவர்களின் வார்த்தைகளை பயன்படுத்துங்கள்.

   அவர்களின் பெயர்களைச் சொல்லி அழைப்பது, நெருக்கத்தை ஏற்படுத்தும். அவர்களின் வார்த்தைகளை நாம் பயன்படுத்துவது நமது அன்பைக் காட்டுவதை வெளிப்படுத்தும்.

4. எப்போதும் மற்றவர்களின் கேள்விகளுக்கு யோசித்துப் பதில் சொல்ல வேண்டும்.

   நீங்கள் பேசிக்கொண்டிருப்பவர் கேட்கும் கேள்விகளுக்கு உடனுக்குடன் பதில் சொல்வது அவரது கேள்வியை புரியாமல் பேசுவதாக எண்ணத் தோன்றும். எனவே மற்றவர்களின் கேள்விக்கு நிறுத்தி, நிதானமாக, யோசித்துப் பதில் சொல்ல வேண்டும்.

5. நீ, நீங்கள் என்ற வார்த்தைகளை அதிகம் பயன்படுத்துங்கள் இத்துடன் குறிப்பாக நான், என், எனது, என்னுடைய என்ற வார்த்தைகளை முடிந்த அளவு தவிர்க்கவும்.

6. காத்திருப்பர்களைப் பார்த்ததும், அவர்கள் காத்திருந்தமைக்கு நன்றி சொல்லுங்கள்.

உங்களுக்காக மற்றவர்கள் காத்திருக்க நேர்ந்தால் அவர்கள் காத்திருந்தது தெரியும் என்பதை உணர்த்தும் வகையில், அவர்களுக்கு நன்றி கூறினால், அது அவர்களை அங்கீகரித்ததாக இருக்கும்.

7. குழுவினரிடம் பேசும்போது அனைவருக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

குழுவினரிடம் பேசும் போது, குழுத் தலைவர், அல்லது யாரேனும் ஒருவரிடம் மட்டுமல்ல, அனைவரிடத்தும் கவனம் செலுத்தவும். குழு தனிமனிதர்களை விடப் பெரிது.



## மனிதர்களுடன் இணக்கமாகப் போகும் கலை

மனிதர்களுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள, நீங்கள் மற்றவர்களுடன் இணக்கமாக, ஒத்துப்போவதில் வல்லவராக இருக்க வேண்டும். இது இன்றைய காலத்தின் மதிப்புமிக்க ஒரு குணமாகும். இணக்கமாகப் போவதைப் போல மற்ற எந்தச் செயல்பாடும் உங்களது வாழ்வில் அதிகம் உதவாது என்றே கூறலாம். சமரசம் செய்துகொள்வது தொடர்ந்து சரிப்படுத்திக்கொள்ள உதவும். ஆனால் சண்டையிடுவது உறவை முறித்துக்கொள்ள மட்டுமே உதவும்.

மற்றவர்களோடு ஒத்துப்போகாமல் இருக்க முடியும் என்று நினைப்பதை முட்டாள்தனம் என்று கூடச் சொல்லலாம். ஆனால் அறிவுடைய, பெரிய மனிதர்கள் மற்றவர்கள் தவறாக இருக்கும் போது கூட அவர்களுடன் ஒத்துப்போகும் குணத்தைப் பெற்றிருப்பார்கள்.

### இணக்கமாகப் போகும் கலையின் ஆறு வழிகள்

1. முதலில் மற்றவர்களுடன் ஒத்துப்போகக் கற்றுக்கொள்ளுங்கள்.

மனிதர்களிடம் இணக்கமாகப் போக உங்களது மனதில் ஒத்துப்போகும் குணத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்களுக்குள் ஒத்துப்போகப் பழகினால், அது இயற்கையிலேயே உங்களை ஒத்துப்போபவராக மாற்றிவிடும். ஒத்துப்போவது என்பது எல்லாவற்றையும் ஒத்துக்கொள்வது என்பது அல்ல. ஒத்துப்போய் பிறகு விருப்பமான மாற்றத்தை ஏற்படுத்துவது ஒரு சிறந்த வழிமுறையாகும்.

2. நீங்கள் ஒத்துப்போவது மட்டும் போதாது, "நீங்கள் ஒத்துப்போவதை அவர்கள் அறிய வேண்டும். அது எவ்வாறு ?

அவர்கள் பேசும்போது, நீங்கள் ஏற்றுக்கொண்டதை 'ஆம்' என்று கூறுங்கள். தலையை அசைத்து ஏற்றுக் கொண்டதைத் தெரிவியுங்கள். நான் ஏற்றுக் கொள்கிறேன் அல்லது 'நீங்கள் சொல்வது சரியே' என்று கூறி உங்கள் இசைவைத் தெரிவிக்க

வேண்டும். உங்களது இசைவை அவர்கள் முழுமையாகப் புரிந்துகொள்ளும் வகையில் தெரிவிக்க வேண்டும்.

3. *உரையாடலின் போது அவர்களுடன் இசைவாக இல்லை என்பதைத் தெரிவிப்பது அவசியமில்லை. தேவைப்பட்டால் மட்டும் தெரிவிக்கலாம்.*

பல நேரங்களில் நீங்கள் மனிதர்களுடன் ஒத்துப் போகாமல் இருக்கலாம் அப்போதெல்லாம் அவர்களிடம் நீங்கள் ஒத்துப் போகவில்லை என்பதை அவசியம் ஏற்படாமல் தெரிவிக்க வேண்டியதில்லை. இதைக் கடைப்பிடித்துச் செய்து பார்த்தால் முடிவு உங்களுக்கே ஆச்சரியமாக இருக்கும். அதாவது, ஒத்துப்போவதை உடனே தெரிவித்துவிடுவதும் ஒத்துப்போகாததை அவசியப்படாமல் தெரிவிக்காமல் இருப்பதும் நெருக்கத்தை ஏற்படுத்தும்.

4. *நீங்கள் சொல்வது தவறாக இருப்பதை அறிந்ததும் ஒத்துக்கொள்ளுங்கள்.*

நீங்கள் சொன்னது தவறு என்றால் உடனே 'நான் தவறு செய்துவிட்டேன்' அல்லது 'நான் சொல்வது தவறானது' என சத்தமாகச் சொல்லவும். இவ்வாறு அறிவாளிகள் மட்டுமே செய்வார்கள். இவ்வாறு தவறை ஏற்றுக் கொள்பவர்களை மற்றவர்கள் பாராட்டுவார்கள். பொய் சொல்வது, மறைப்பது மற்றும் தவறை மறைக்க மேலும் தவறு செய்வது என்பது சாதாரண மனிதன் செய்யும் செயலாகும். மேலும் இது உறவை முறிக்கும் செயலாகும். சிலர் தவறை மறைப்பது சாமர்த்தியம் என தவறாகக் கருதி அம்பலப்பட்டும் போவதுண்டு.

5. *விவாதம் செய்வதில் இருந்து முடிந்த அளவு விலகி இருங்கள்.*

எதற்கெடுத்தாலும் விவாதிப்பது, மனித உறவை வளர்ப்பதில் மிக மோசமான விளைவையே ஏற்படுத்தும். நீங்கள் சரியாக இருந்தாலும், உடனடியாக விவாதிக்காதீர்கள்.

விவாதத்தில் வெற்றி பெறலாம் ஆனால் நட்பைப் பெற முடியாது. மிகவும் அவசியம் என்றால், விவாதம் செய்வதாக மற்றவர்கள்



நினைக்காதபடி உங்களது எதிர்க்கருத்துக்களை நாசூக்காகப் பிறர் மனம் புண்படாமல் சொல்லிப்பாருங்கள். மற்றவர்கள் உங்கள் கருத்திலுள்ள உண்மையைத் தெரிந்து கொள்ளும் பட்சத்தில் உங்கள் உறவு மிகவும் பலப்படும். விவதமாக இன்றி ஆலோசனையாக கருத்துக்களை முன்வையுங்கள்.

6. *சண்டை இடுபவர்களைச் சரியாகக் கையாள தெரிந்திருக்க வேண்டும்.* சண்டை இடுபவர்கள் விரும்புவது சண்டையை மட்டுமே. அவர்களை அடக்கும் வழி அவர்களிடம் சண்டை போடாமல் இருப்பதுதான். நீங்கள் சண்டை போடாவிட்டால், அவர்கள் கத்துவார்கள், கொதிப்பார்கள், பின் அவர்களுக்கே அது பைத்தியக்காரத்தனமாகத் தோன்றும். அதுவரை உங்களுக்குப் பொறுமை அவசியம்.

## ஒத்துப் போகும் கலையின் முக்கியத்துவம்

- ஒத்துப்போகின்றவர்களை மனிதர்கள் விரும்புகின்றனர்
- ஒத்துப்போகாதவர்களை மனிதர்கள் வெறுக்கின்றனர்
- யாரும் தான் மற்றவர்களிடம் ஒத்துப்போகாமல் இருப்பதை விரும்புவதில்லை.